**ஜூலை – 24**

# TNPSC துளிகள்

- சுவிட்சர்லாந்தின் லாவ்சேன் என்னுமிடத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேச ஒலிம்பிக் குழுவானது தனது முழக்கத்தை ‘Faster, Higher, Stronger- Together’ என மாற்றியுள்ளது.
  - 1894 ஆம் ஆண்டு முதல் ‘Faster, Highter, Stronger’ என்பதே ஒலிம்பிக் போட்டிகளின் முழக்கமாக இருந்து வந்தது.
- அஸ்ஸாம் மாநில முதல்வர் டாக்டர் ஹிமந்த பிஸ்வா சர்மா, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற அசாமின் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மாநில அரசு வேலை வழங்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.
- வங்கி மற்றும் நிதிச் சேவை நிறுவனமான கோல்ட்மேன் சாக்ஸ், ஹைதராபாத்தில் ஒரு புதிய அலுவலகத்தைத் திறந்துள்ளது.
  - வங்கி மற்றும் நிதிச் சேவைக்கான முக்கிய முதலீட்டு மையமாக ஹைதராபாத் வளர்ந்து வருகிறது.
- கூகுள் இந்திய நிறுவனத்தின் துணைத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சஞ்சய் குப்தா 2021-23 ஆம் காலகட்டத்திற்கான இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதாக இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகம் தெரிவித்துள்ளது.
  - அமேசான் இந்திய நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவரும், இந்திய நாட்டு மேலாளருமான அமித் அகர்வாலுக்குப் பின் அவர் இந்தப் பதவியை ஏற்கிறார்.
- மத்திய மின்சாரம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர்.கே. சிங் அவர்கள், BEE என்ற (Bureau of Energy Efficiency) எரிசக்திப் பாதுகாப்புக் கட்டிடக் குறியீடுகளுக்குக் இணங்க கட்டப்பட்ட கட்டிட வடிவமைப்புகளை ஊக்குவிக்கச் செய்வதற்காக NEERMAN விருதுகள் என்ற பெயரில் ஒரு முன்முயற்சியைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - NEERMAN ஆனது 'National Energy Efficiency Roadmap for Movement towards Affordable & Natural Habitat' என்பதைக் குறிக்கிறது.
- கொல்லம் மாவட்டத்தில் உள்ள பெரும்குளத்திற்கு கேரளாவின் முதல் ‘புத்தகக் கிராமம்’ என்ற அடைமொழி வழங்கப் பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் ஆறு நதிகள் புத்துயிர் பெறுவதற்காக வேண்டி சில புதிய திட்டங்களுக்கு தேசிய கங்கை நதி மீதான தூய்மைத் திட்டமானது ஒப்புதல் அளித்து உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## நிலைப்படுத்தப்பட்ட தொலைக் கட்டுப்பாட்டுத் துப்பாக்கி

- திருச்சிராப்பள்ளியின் ஆயுதத் தொழிற்சாலையானது இந்தியக் கடற்படையிடம் 12.7 மி.மீ. M2 NATO என்ற வகையிலான நிலைப்படுத்தப்பட்ட 15 தொலைக்கட்டுப்பாட்டுத் துப்பாக்கிகளையும் இந்தியக் கடலோர காவற்படையிடம் அது போன்ற 10 துப்பாக்கிகளையும் வழங்கியுள்ளது.
- இவை இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ் எனும் ஒரு நிறுவனத்துடனான தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் மூலம் தயாரிக்கப் பட்டவையாகும்.



## நீதிபதி முருகேசன் குழு

- இக்குழுவானது தமிழக முதலமைச்சரிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- இக்குழு ஜுன் 15 அன்று அமைக்கப்பட்டது.
- தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் சேர்க்கை குறித்த ஆய்வினை இக்குழுவானது மேற்கொண்டது.
- எதனால் சுமார் 2 சதவீதத்திற்கும் குறைவான அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மட்டுமே அண்ணா பல்கலைக்கழகத்திலும் 10 சதவீதத்திற்கும் குறைவான மாணாக்கர்கள் மட்டுமே மாநில அரசின் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகளிலும் சேர்க்கப் படுகின்றனர் என்பது குறித்து இந்த அறிக்கையில் விவாதிக்கப் பட்டுள்ளது.
- அரசுக் கல்லூரிகளில் தொழில்முறைப் பாடப்பிரிவுகளுக்கான (மருத்துவக் கல்வி தவிர) இட ஒதுக்கீட்டில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

- இது ஒரு இணைப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட உள்ளது.
- விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் மற்றும் விழுப்புரத்திலுள்ள டாக்டர் J. ஜெயலலிதா சட்டப் பல்கலைக்கழகம் ஆகியவை அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட உள்ளது.

## முதலீட்டாளர்களின் முதல் முகவரி – முதலீட்டு மாநாடு

- 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 1 லட்சம் கோடி டாலராக (அ) ஒரு டிரில்லியன் பொருளாதாரமாக மாறும் என தமிழக முதல்வர் இந்த மாநாட்டில் தெரிவித்தார்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் 23 லட்சம் கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை

ஈர்ப்பதற்குமான ஒரு இலக்கினையும் அவர் நிர்ணயித்துள்ளார்.

- ❖ சென்னையில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டில் 35 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இவை 17,000 கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை உள்ளடக்கியதாகும்.
- ❖ தற்போதுள்ள மற்றும் புதிய முதலீட்டாளர்களுக்காக வேண்டி 24 துறைகளின் கீழ்வரும் 100க்கும் மேற்பட்ட சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ஒற்றைச் சாளர தளத்தின் 2வது பதிப்பினையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.
- ❖ தமிழ்நாட்டில் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் தொடக்க நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலீட்டை ஊக்குவிப்பிதற்கான மாநிலத் தலைமை நிறுவனமான கைடன்ஸ் தமிழ்நாடு எனும் ஒரு நிறுவனமானது அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் சங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- ❖ டிஜிட்டல் உத்வேக திட்ட அமைப்பானது புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொடக்க நிறுவனங்களுக்கு நிதி உதவியை வழங்கி உள்ளது.
- ❖ இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 5 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.




***சில முக்கிய முதலீட்டு ஒப்பந்தங்கள்***

- ❖ மகேந்திரா வேல்டு சிட்டியில் டென்மார்க் நாட்டு வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி நிறுவனமான டைநெக்சின் உற்பத்தி அலகும், ஈரோட்டில் கோரல் மேனுஃபேக்சரிங் ஒர்க்சின் உற்பத்தி அலகும் தொடங்கப் பட்டுள்ளன.
- ❖ ஓசூரில் INOX ஏர் பிராடக்ட்ஸ் (வாயு சாதனங்கள்) நிறுவனத்தின் திரவ ஆக்சிஜன் ஆலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- ❖ தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் JSW ரிநியூ எனர்ஜி டூ லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பந்தம்.
- ❖ ஓரகடத்திலுள்ள சிப்காட் வளாகத்தில் ஜெர்மன் நாட்டின் ZF வாப்கோ நிறுவனத்தின் ஒப்பந்தம்.
- ❖ அம்பத்தூரில் சிங்கப்பூர் நாட்டின் கேபிட்டா லாண்ட் நிறுவனம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம்.
- ❖ கோயம்புத்தூரில் ஸ்ரீவாரு மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம்.

❖ சிறுசேரி சிப்காட் IT பார்க் – TCS Phase III.

# தேசியச் செய்திகள்

## ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம்

❖ 'ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின்' (Stand Up India Scheme) கால அளவை 2025 ஆம் ஆண்டு வரை இந்திய அரசு நீட்டித்துள்ளது.

❖ இது பட்டியல் இனத்தோர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு கடன் வழங்கச் செய்வதற்கும், அவர்களிடையேத் தொழில்முனைவோரை ஊக்குவிக்கச் செய்வதற்கும் வேண்டி 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரதமரால் தொடங்கப் பட்டது.

❖ 'கிரீன்ஃபீல்ட் நிறுவனத்தை' (greenfield enterprise) அமைப்பதில் அவர்களை ஊக்குவிக்கச் செய்வதற்காக இந்தத் திட்டம் வங்கிக் கடன்களை வழங்குகிறது.

❖ இங்கே கிரீன்ஃபீல்ட் என்பது பண்ணைத் துறை அல்லாமல் உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை என்று மட்டுமே பொருள்படும்.




## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

❖ இந்த விளையாட்டின் இரண்டாவது பதிப்பு மார்ச் 2022 முதல் பெங்களூரில் நடைபெறும்.

❖ இதன் முதல் பதிப்பு 2020 ஆம் ஆண்டில் ஒடிசாவில் நடத்தப் பட்டது.

❖ இது இந்தியாவின் பல்கலைக்கழகங்கள் அளவிலான மட்டத்தில் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியாகும்.

❖ இதை இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், இந்திய பல்கலைக்கழகங்களின் சங்கம், இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்கின்றன.

- இது 2018 ஆம் ஆண்டில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியானது வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்ட பின்னர் தொடங்கப்பட்டது.
- அந்த விளையாட்டுகள் அதன் மூன்றாவது பதிப்பை 2020 ஆம் ஆண்டில் முடித்தன.
- அதன் நான்காவது பதிப்பு 2021 ஆம் ஆண்டில் ஹரியானாவில் நடத்தப் பெறும்.




## 97வது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து உச்ச நீதிமன்றம்


- 97வது அரசியலமைப்புத் திருத்தத்தின் செல்லுபடித் தன்மையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- ஆனால் அது 97வது திருத்தத்தால் சேர்க்கப்பட்ட ஒரு பகுதியை நீக்கியுள்ளது.
- குஜராத் உயர்நீதிமன்றத்தின் 2013 ஆம் ஆண்டின் தீர்ப்பை ஆதரிக்கும் வகையில் 97வது அரசியலமைப்புத் திருத்தத்தின் சில விதிகளை உச்ச நீதிமன்றம் நீக்கி உள்ளது.
- கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலப் பட்டியலில் இருப்பதால், அவை தொடர்பாக நாடாளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தத் திருத்தமானது கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்டங்களை இயற்றுவதற்காக மாநிலங்களுக்குப் பிரத்தியேக அனுமதியை அளிக்கிறது.
- கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் சீரான தன்மையைக் கொண்டு வருவதற்காக இந்தத் திருத்தம் இயற்றப்பட்டதாகவும், அது மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்க வில்லை என்றும் மத்திய அரசு கூறியது.
- ஆனால் மத்திய அரசானது இந்த விவகாரத்தில் சீரான தன்மையை அடைய விரும்பினால், அரசியலமைப்பின் 252வது சட்டப் பிரிவின் கீழ் இதை அணுகுவதே ஒரு சிறந்த வழியாகும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு வேண்டி அதன் ஒப்புதலின் மூலம் சட்டமியற்றும் அதிகாரத்தை அரசியலமைப்பின் 252வது பிரிவு பாராளுமன்றத்திற்கு வழங்குகிறது.

## விரைவான விசாரணை

- பீமா கோரேகான் சாதி வன்முறை வழக்கில், "விரைவான விசாரணை ஓர் அடிப்படை உரிமை" (speedy trial is a fundamental right") என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- இந்தியாவில், "சட்டத்தால் வகுக்கப்பட்ட நடைமுறையைத் தவிர வேறு எந்த முறையிலும் எந்தவொரு நபரின் வாழ்க்கை அல்லது தனிப்பட்டச் சுதந்திரம் பறிக்கப் படக் கூடாது" என்று இந்திய அரசியலமைப்பின் 21வது சட்ட பிரிவின் கீழ் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

## தேசியப் பாதுகாப்புச் சட்டம், 1980




- மணிப்பூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் எரேந்திர லெய்சொங்போம் (Erendra Leichongbom) என்பவரைச் சிறையிலிருந்து விடுவிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- அவர் தனது சமூக ஊடகப் பதிவுகளுக்காக வேண்டி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டார்.
- அவரைத் தொடர்ந்து காவலில் வைத்திருப்பது அவரது வாழ்க்கைக்கான அடிப்படை உரிமையின் மீறல் மற்றும் சட்ட முறை சார்ந்த மீறல் என்று நீதிமன்றம் கூறி உள்ளது.
- சாதாரணத் தண்டனைப் பிரிவுகள் கூட பொருந்தாத வழக்குகளில் தடுப்புக் காவல் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துவதாக நீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.
- தேசியப் பாதுகாப்புச் சட்டமானது ஒரு தடுப்புக் காவல் சட்டம் ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## MAKS 2021 வானியல் சாகசம்

- ரஷ்யாவின் மாஸ்கோ என்னுமிடத்தில் நடைபெற்ற MAKS 2021 எனும் வானியல் சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் சாரங் ஹெலிகாப்டர் அணி முதன்முறையாகப் பங்கேற்றது.
- ரஷ்யாவில் சாரங் அணி தனது நான்கு ஹெலிகாப்டர்களின் சாகசத்தை நிகழ்த்துவது இதுவே முதல் முறையாகும்.
- சாரங் அணியானது ‘துருவ்’ எனப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப் பட்ட இலகுரக ஹெலிகாப்டருடன் இந்த சாகசத்தில் பங்கேற்றது.
- சாரங் அணியானது பெங்களூருவில் 2003 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

- துருவ் எனும் ஹெலிகாப்டரானது இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் லிமிடெட் என்ற ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.




## யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் - பட்டியலில் இருந்து நீக்கம்

- ஐக்கியப் பேரரசின் லிவர்பூல் நகரமானது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
- அதன் கடல் சார்ந்த வரலாற்றை அங்கீகரிக்கும் வகையில் அதற்கு 2004 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டது.
- முன்னதாக, இரண்டு தளங்கள் மட்டுமே இந்த அந்தஸ்தை இழந்துள்ளன.
- அவை 2007 ஆம் ஆண்டில் ஓமனில் உள்ள அரேபிய ஓரிக்ஸ் சரணாலயம் மற்றும் 2009 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் டிரெஸ்டன் எல்பே பள்ளத்தாக்கு ஆகியனவாகும்.





# பொருளாதாரச் செய்திகள்

## வாகன எரிபொருள் மீதான கலால் வரி


- 2021 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரி வசூலானது ரூ.3.35 லட்சம் கோடியை எட்டியுள்ளது.
- 2020 ஆம் நிதி ஆண்டில் இது ரூ.1.78 லட்சம் கோடியாக இருந்தது.

- இதில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரி மட்டுமின்றி, விமான எரிபொருள், இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் ஆகியவை மீதான கலால் வரிகளும் அடங்கும்.
- வரி வசூலானது மேலும் அதிகமாக இருந்திருக்கும், ஆனால் கடந்த ஆண்டில் விதிக்கப் பட்ட ஊரடங்கினால் எரிபொருள் விற்பனை சரிந்துள்ளதால் அது குறைவாகவே உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதி மற்றும் மே மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் பெட்ரோலுக்கான கலால் வரியை லிட்டருக்கு 13 ரூபாயாகவும் டீசலுக்கான கலால் வரியை லிட்டருக்கு 16 ரூபாயாகவும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது.
- சில மாநிலங்களில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 100 ரூபாய்க்கு அதிகமாகவும் டீசல் விலை லிட்டருக்கு 90 ரூபாய்க்கு அதிகமாகவும் விற்கப் படுவதற்குக் காரணம் அதிக வரி விதிப்பே அன்றி கச்சா எண்ணெயின் விலை உயர்வு அல்ல.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தானியங்கு செவித்திறன் மூளைத்தண்டு உணர்வு அமைப்பு




- புதிதாக பிறந்த மற்றும் சிறு வயது குழந்தைகளுக்கு ஏற்படும் கேட்கும் திறன் இழப்பை சரி செய்வதற்காக வேண்டி பஞ்சாப் அரசானது இந்த அமைப்பைத்

தொடங்கி உள்ளது.

❖ நாட்டில் இதுபோன்ற அமைப்பைத் தொடங்கிய முதல் மாநிலம் இதுவே ஆகும்.

## AMLEX சாதனம்

❖ ரூபாரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது இந்தியாவிலேயே முதன் முறையாக ஆக்சிஜன் சீராக்க வழங்கீட்டுச் சாதனத்தை உருவாக்கியுள்ளது.

❖ இந்தச் சாதனமானது ஒரு நோயாளியால் பயன்படுத்தப் படும் ஆக்சிஜன் சிலிண்டரிலிருந்து (கலன்) ஆக்சிஜன் ஓட்டம் சீராக்கப் பட்டு ஆக்சிஜன் வீணாவதைத் தடுக்கிறது.

❖ இந்தச் சாதனமானது ஆக்சிஜன் சிலிண்டரின் உபயோகக் காலத்தை அதிகரிக்கச் செய்வதால் மருத்துவமனைகள் மற்றும் நோயாளிகள் ஆகியோரின் செலவும் இதனால் குறையும்.





## 4வது தேசிய செரோ சர்வே

❖ ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் நாடு முழுவதும் 70 மாவட்டங்களில் தேசிய செரோ சர்வேயின் நான்காவது சுற்று நடத்தப்பட்டது.

❖ SARS-CoV2 வைரஸ் ஆன்டிபாடிகள் இருப்பைக் கண்டறிய இந்தக் கணக்கெடுப்பின் கீழ் மொத்தம் 28,975 பேர் பரிசோதிக்கப் பட்டனர்.

❖ இந்த செரோ சர்வே ஆனது 6-17 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும் முதல் முறையாக உள்ளடக்கி உள்ளது.


- ஆறு வயதிற்கு மேற்பட்ட வகையில் நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் ஏற்கனவே கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இதில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பால்ராம் பார்கவா மூலம் தெரிவிக்கப் பட்டது.
- ஒட்டு மொத்த எண்ணிக்கையில் செரோபிரீவேலன்ஸ் (மக்கள் தொகையில் நோய்க் கிருமியின் நிலை) ஆனது 67.6 சதவிகிதம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- மூன்றாவது அலையானது இரண்டாவது அலை போல கடுமையாக இருப்பதற்கான வாய்ப்பை இது வெகுவாகக் குறைத்துள்ளது.
- கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு தவணைகளையும் செலுத்திக் கொண்டவர்களின் மீதான செரோபிரீவேலன்ஸ் ஆனது 89.8 சதவீதமாக இருந்தது.
- தடுப்பூசியின் ஒரு தவணையைச் செலுத்தியவர்களில் கூட இது 81 சதவீதமாக உள்ளது.
- ஒரு தவணை கூட செலுத்தாதவர்களில் இது 62.3 சதவீதமாக இருந்தது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுவிஸ் ஆல்ப்ஸில் 1,000 ஏரிகள்


- சுவிஸ் நாட்டின் ஆல்ப்ஸில் பனிப்பாறைகள் உருகுவதால், அது ஆல்ப்ஸ் மலைப் பகுதி முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட புதிய ஏரிகளை உருவாக்கியுள்ளது.
- விரைவான காலநிலை மாற்றமே இதற்குக் காரணமாகும்.
- 1850 ஆம் ஆண்டில் சிறிய பனி யுகத்தின் முடிவில் இருந்து, இந்த ஏரிகள் உருவாக்கப் பட்டுள்ளன.
- சிறிய பனி யுகம் (லிட்டில் ஐஸ் ஏஜ்) என்பது 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஏற்பட்ட ஒரு காலநிலை இடைவெளியாகும்.




# மாநிலச் செய்திகள்

## ஆதர்ஷ் ஸ்மரக் திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ் ஆந்திர மாநிலத்தில் மூன்று நினைவுச் சின்னங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- ஸ்ரீகாகுளத்தில் உள்ள சாலிஹுண்டத்தில் உள்ள பௌத்த மிச்சங்கள், குண்டூரின் நாகார்ஜுனகொண்டாவில் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் அனந்தப்பூரில் உள்ள வீரபத்ரா கோயில் ஆகியவை இந்தத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- இந்த நினைவுச் சின்னங்கள் கூடுதல் வசதிகளுடன் சுற்றுலாவை ஊக்குவிக்கும் தளங்களாக மாற்றப்படும்.
- இந்தத் திட்டத்தை கலாச்சார அமைச்சகமானது 2014 ஆம் ஆண்டில் தொடங்கியது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### சிவ் நாடார்



- HCL டெக் என்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பதவியிலிருந்து சிவ் நாடார் விலகியுள்ளார்.
- இவர் Chairman Emiritus (கௌரவப் பட்டம்) எனும் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- HCL நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக இயக்குநரான C. விஜயகுமார் என்பவரை அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பொறுப்பில் 5 ஆண்டு பதவிக் காலத்திற்கு HCL நிறுவனம் நியமித்துள்ளது.
- ரோசினி நாடார் மல்ஹோத்ரா HCL நிறுவனம் மற்றும் இயக்குநர் வாரியம் ஆகியவற்றின் தலைவராகவும் ஒரு நிர்வாகம் சாரா இயக்குநராகவும் நியமிக்கப் பட்டு


உள்ளார்.

- ❖ இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு IT நிறுவனத்திற்குத் தலைமை தாங்கும் முதல் பெண் இவரே ஆவார்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஒளிபரப்பு தினம் – ஜூலை 23


- ❖ 1927 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் இந்திய ஒளிபரப்பு நிறுவனத்தின் பம்பாய் வானொலி நிலையத்திலிருந்து முதல் வானொலி ஒலிபரப்பானது ஒலிபரப்பப் பட்டது.
- ❖ இந்தியாவில் வானொலி ஒலிபரப்பானது 1923 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது பம்பாய் வானொலிச் சங்கத்தினால் தொடங்கப்பட்டது.
- ❖ பின்பு அது 1936 ஆம் ஆண்டில் அனைத்திந்திய வானொலியாகவும் 1957 ஆம் ஆண்டில் ஆகாஷ்வானியாகவும் மாற்றப் பட்டது.
- ❖ இது இந்தியாவின் மிகப்பெரிய ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதி என்ற ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும்.




## தேசிய வெப்பவியல் பொறியாளர் தினம் – ஜூலை 24

- ❖ தினசரி வாழ்வில் வெப்பவியல் பொறியாளர்கள் ஆற்றும் முக்கியப் பங்களிப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இந்த தினம் ஆண்டின் வெப்பமான நாட்களுள் ஒன்று என்பதனால் வெப்பவியல் பொறியாளர்களின் பங்களிப்பினைக் கொண்டாட இந்த தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- ❖ இத்தினமானது 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அமெரிக்காவின் அட்வான்சுடு

தெர்மல் சொல்யூசன்ஸ் எனும் நிறுவனத்தினால் நிறுவப்பட்டது.




## வருமான வரி தினம் – ஜூலை 24

- 1860 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் இந்தியாவில் வருமான வரி அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் போது பிரித்தானிய அரசிற்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்காக விதிக்கப்பட்டது.
- இந்தத் தினமே 2010 ஆம் ஆண்டு முதல் வருமான வரி தினமாக இந்தியாவில் அனுசரிக்கப் பட்டு வருகிறது.
- இந்த தினமானது மத்திய நேர்முக வரிகள் வாரியத்தினால் அனுசரிக்கப் படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★